IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 42/2024

Deposition of witness for prosecution : PW8

Defense :

Name : பாலகணேசன்

Father's Name : ராமசாமி

Village :

Taluk : ஆரணி

Caste :

Calling : உதவி மருத்துவர், அரசு மருத்துவமனை, ஆரணி.

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.01.2025.

**முதல் விசாரணை**

**1. எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 எதிரிக்கு மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

2. நான் தற்போது ஆரணி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.03.2021 அன்று மாலை 03.40 மணி அளவில் அவசர பிரிவில் பணிபுரிந்த போது சுமார் 40 வயதுடைய கணேசன் மகன் பூங்காவனம், கருணகிரி தெரு, வடுகசாத்து கிராமம், ஆரணி என்பவரை தன்னை வேலு என்பவரால் சிகைச்சைக்காக அழைத்து வரப்பட்டார். பூங்காவனம் என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபரால் அதே நாளில் மாலை 03.00 மணிக்கு நகராட்சி அருகாமையில் கட்டையால் தாக்கியதாக கூறினார்.

3. அவரை பரிசோதனை செய்த போது அவரது வலது தோள்பட்டையில் கன்னிய காயம் 1x1 செ.மீ அளவிலான காயம் காணப்பட்டது. காயம் பட்ட நபர் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். மேலும் அவருக்கு X ray மற்றும் எலும்பு மருத்துவர் ஆலோசனைக்காக பரிந்துரை செய்யப்பட்டார்.

4. எலும்பு மருத்துவர் காயம் பட்ட நபருக்கு அளித்த சிகிச்சையின் பேரில் அவருக்கு ஏற்பட்ட காயம் ஆனது சொற்ப காயம் என்று நான் சான்று வழங்கினேன். சிகிச்சை பெற்ற நபருக்கு

வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் உடன் நான் வழங்கிய கருத்துரை **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயம் பட்ட நபருக்கு சொன்ன விதத்தில் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. காயம் பட்ட நபருக்கு ஏற்பட்டிருந்த காயத்தின் நிறம், வயது மற்றும் தன்மை குறித்து விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் ஆனது பொதுவாக ஒரு நபர் எங்காவது இடித்து கொண்டாலும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றாலும் சரிதான்.

2. காயம் பட்ட நபர் சிகிச்சைக்கு வந்தபோது வாக்குமூலம் தேவையா இல்லையா என்பதற்கு வாக்குமூலம் வேண்டாம் என்று தெரிவித்ததாக விபத்து பதிவேட்டு நகலில் உள்ளது என்றால் சரிதான். ஆனாலும் மருத்துவமனை சார்பாக காயம் பட்ட நபரின் நிலை குறித்து காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

3. காயம் பட்ட நபர் சிகிச்சைக்கு வரும் போது நல்ல நிலையில் இருந்தாரா அல்லது மயக்க நிலையில் இருந்தாரா என்றால் நல்ல நிலையில் தான் இருந்தார். போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் விபத்து பதிவேட்டு நகல் வாங்குவதற்காக வந்தபோது என்னை விசாரணை செய்தார். போலீசார் என் வாக்குமூலத்தை பதிவு செய்தார்களா என்றால் வாய்மொழியாக கேட்டார்கள். நான் 24 மணி நேரம் பணியில் சம்பவ தினத்தன்று இருந்தேன்.

4. சம்பவத்தின் போது காயம் பட்ட நபருக்கு தோள் பட்டையில் ஏற்பட்ட காயத்தை போன்று தான் தலையில் காயம்பட்டிருந்தாலும் அதே அளவிலான காயம் தான் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அவ்வாறான காயம் தலையில் ஏற்பட்டிருந்தால் காயம் பட்ட நபருக்கு மரணம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை.